செ.வெ.எண் :30/மார்ச்                                                                                    நாள்:21.03.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

**மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு கை சுத்திகரிப்பான் (Hand Sanitizer) தயாரிக்கப்பட்டு வருகிறது**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுசுகாதாரத்துறை மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து முதற்கட்டமாக தயாரித்துள்ள 1500 லிட்டர் கை சுத்திகரிப்பான்களை (Hand Sanitizer) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.03.2020) நேரிடையாகச் சென்று பார்வையிட்டார்.

அதன்பின்பு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தும் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட அளவில் 33 மருத்துவக்குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலமாக மாவட்ட எல்லைகளிலுள்ள 9 சோதனைச் சாவடிகளில் வெளி மாவட்டங்களிலிருந்து வரும் மக்களை கண்காணிக்கவும், 15 குழுக்கள் மண்டல வாரியாகவும் பொதுமக்களிடம் கொரோனா வைரஸ் பற்றிய அச்சத்தை தவிர்த்திடும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அண்டை நாடுகளிலிருந்து திரும்பியவர்களை தொடர்ந்து கண்காணித்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், கைகளை சுத்தமாக தேய்த்து கழுவிடவும், தேவையற்ற பயணங்களை தவிர்த்திடவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், கை சுத்திகரிப்பான் (Hand Sanitizer) தட்டுப்பாடு ஏற்படாமல் தவிர்த்திடும் நோக்கில் உலக சுகாதார நிறுவனம் (WHO) வரையறுத்துள்ள வழிமுறைகளை பின்பற்றி எளிமையாக குறைந்த செலவில் கை சுத்திகரிப்பான் தயாரிக்கப்பட்டுள்ளது. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு மருத்துவர்கள், மருந்து தர ஆய்வாளர்கள் மேற்பார்வையில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தம் 1,500 லிட்டர் கை சுத்திரிப்பான் தயாரித்து அவற்றை 500 மி.லி. அளவு பாட்டில்களில் அடைத்து மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், பல்வேறு அரசு அலுவலகங்களுக்கு விநியோகித்திட திட்டமிடப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப கூடுதலாக கை சுத்திகரிப்பான் தயாரித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.மா.பிரதீப்குமார்,இ.ஆ.ப., உதவி மகளிர் திட்ட அலுவலர் திரு.வெ.கிருஷ்ணகுமார், மருத்துவ அலுவலர் திரு. ஜெ.ஸ்டெபனோ, மருந்து தர ஆய்வாளர் திரு.பிரபு உட்பட அரசு அலுவலர்கள், மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**